ETERNAL VISION
'TO ELIMINATE NEEDLESS BLINDNESS'
100 YEARS

Dr. G. Venkataswamy
1918 - 2006

# கண் ஒளி

விழி 35 | பார்வை 03 | அக்டோபர் 2018



ARAVIND EYE CARE SYSTEM

aurolab

## Regained precise vision!

துல்லியமான பார்வையை மீண்டும் பெற்றேன் !
கண்ணாடிக்கும் குட்-பை சொல்லி விட்டேன் !



# Goodbye Spectacles*

*(High spectacle independence)*

கண்புரை அறுவை சிகிச்சைக்குப் பின், கண்ணாடி அணியாமலே துல்லியமான பார்வை பெற அரவிந்த் கண் மருத்துவமனையை அணுகவும்.

கண் ஒளி

அரவிந்த் வெளியீடு

கண் நல விழிப்புணர்வு

மாத இதழ்

ஆசிரியர்

டாக்டர்.ஜி.நாச்சியார்

ஆசிரியர் குழு

சித்ரா துளசிராஜ்
கோ. முருகராஜ்
திவ்யா ரமேஷ்

சந்தா பொறுப்பாளர்

ஜெ. பரிமளா

தொடர்புக்கு :
'கண்ஒளி'
அரவிந்த் கண்
மருத்துவமனை,
1, அண்ணாநகர்,
மதுரை – 625020

மின்னஞ்சல் :
kannoli@aravind.org

# உள்ளே . . .

உடல்நலன் எனும் செல்வம் 4

ஆலோசனைப் பகுதி 5

நீரிழிவு (சர்க்கரை) நோய் 6

கண்ணீர்ப் பாதை அடைப்பு 9

கண்தானத்தில் முதலிடத்தில் இருக்கும் தமிழ்நாடு 12

முகாம் மூலம் கிடைத்த பார்வை 15

லேசிக் 16

கண்புரை அகற்றப் பயன்படும் ஃபேக்கோ 17

கண் பரிசோதனை மையங்கள்: தேனி மாவட்டம் 18

அரவிந்த் இலவச கண் பரிசோதனை முகாம்கள் 19

கண் தான வள்ளல்கள் 22

# உடல்நலன் எனும் செல்வம்



பொருள் ஈட்டுவதும் சொத்துகளை வாங்குவதும் செல்வம் என பொதுவாக வரையறுக்கப்பட்டாலும் அவற்றைத் தாண்டியும் சில அரிய செல்வங்கள் இவ்வுலகில் உள்ளன. கல்வி, ஞானம், குடும்பம், உடல்நலன் ஆகியவையும் செல்வம்தான். பொருள் ஈட்டுவதில் நாம் காட்டும் அக்கறையை அவற்றைப் பாதுகாப்பதிலும் காட்டுகிறோம். வெகு சிலர்தான் உடல்நலன் எனும் செல்வத்தை முறையாகப் பேணிப் பாதுகாக்கின்றனர். ஆனால் நம்மில் பலர் உடல்நலனை முறையாகப் பாதுகாப்பதில்லை. நமது கவனமும் அக்கறையும் நமது செல்வத்தின் மீது இல்லையெனில் சிரமப்பட வேண்டியது நாமும் நமது குடும்பமும்தான். இது உடல் நலனுக்கும் பொருந்தும் தானே. உடல்நலக் குறைபாடு ஏற்பட்ட பின் சிகிச்சை எடுத்துக் கொள்வதைவிட சிறந்தது யாதெனில் ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தையும் வாழ்வியல் முறைகளையும் பின்பற்றி ஆரோக்கியமான உடல்நலனைப் பெறுவதே.

நமது செல்வங்களில் சிக்கல்களோ மதிப்பிழப்போ ஏற்படுவது போல் தோன்றினாலே நாம் எவ்வளவு கவனத்துடன் செயல்பட்டு அவற்றைப் பாதுகாக்கிறோம். ஆனால் உடல்நலனைப் பொறுத்தவரை நமது எதிர்வினை எவ்வாறு உள்ளது என நாம் சிந்திக்க வேண்டும். சிறிய தொந்தரவு தானே, சாதாரண ஜுரம் தானே என நமது சிறிய அலட்சியங்களால் நமது உடல்நலனை நாமே கவனிக்கத் தவறுகிறோம்.

நாம் ஆரோக்கியமாக இருப்பது நம்மை மட்டும் சார்ந்தது அல்ல. நமது குடும்பத்தினரையும் சார்ந்தது. உடல்நலன் மீதான தொடர் அக்கறையே நம் அனைவருக்கும் முதலில் தேவை. நமது அடுத்த தலைமுறைக்கு நாம் அளிக்கக்கூடிய மிகப்பெரும் செல்வமே அவர்கள் தங்கள் உடல்நலன் மீதும் குடும்பத்தினரின் உடல்நலன் மீதும் அக்கறை கொள்வதே!

*- ஆசிரியர் குழு*

# ஆலோசனைப் பகுதி

*எனது மனைவிக்கு விழித்திரை குறைபாடுகள் உள்ளது. வலது கண்ணில் உள்ளே ரத்தக் கசிவு ஏற்பட்டு கடந்த இரண்டு மாதங்களாக சிகிச்சை எடுத்தபோதும் பார்வை கிடைக்கப் பெறவில்லை. சொட்டு மருந்து மற்றும் மாத்திரைகளால் இந்தக் குறைபாட்டை சரிசெய்ய இயலுமா? அறுவை சிகிச்சை செய்யாமல் பார்வை கிடைக்கப் பெறுமா? வலது கண்ணில் பாதிப்பு உள்ளதால் இடது கண்ணுக்கு பாதிப்பு ஏற்படுமா? அறுவை சிகிச்சை செய்தால் பார்வை கிடைக்கப் பெறுமா?*

***நாகராஜன், விழுப்புரம்.***

சர்க்கரை நோய், கொழுப்புச்சத்து, உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்களால் விழித்திரையில் இரத்த நாளங்கள் பாதிக்கப்படுவதுடன், புதிதாக பலவீனமான இரத்த நாளங்கள் உருவாவதால் பார்வைக் குறைபாடும் விழித்திரையில் இரத்தக்கசிவும் ஏற்படுகிறது. சொட்டு மருந்து மற்றும் மாத்திரைகளால் இக்குறைபாட்டை சரிசெய்ய இயலாது. எனவே இப்பாதிப்பிற்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். உங்களது மனைவிக்கு மேற்கண்ட நோய்கள் இருந்தால் அதைக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்த பின்பு அறுவை சிகிச்சை செய்யப்படும். வலது கண்ணில் இருக்கும் பாதிப்பு இடது கண்ணிற்கும் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம் உள்ளது. எனவே விரைவில் மருத்துவரிடம் பரிசோதனை செய்து மருத்துவர் பரிந்துரைக்கும் சிகிச்சைகளை செய்து கொள்வது நல்லது. ஏனெனில், விழித்திரை நரம்புகள் பாதிப்படைந்தால் அதை சரிசெய்வது கடினம். எனவே நோயாளிகள் இழந்த பார்வையை மீட்டுத்தர இயலாது, இருக்கும் பார்வையின் அளவை மட்டுமே காப்பாற்ற இயலும். உரிய நேரத்தில் சிகிச்சை எடுத்துக் கொண்டால் முற்றிலும் பார்வையிழப்பு ஏற்படாமல் கண்களை பாதுகாத்துக் கொள்ளலாம்.

***மருத்துவர், அரவிந்த் கண் மருத்துவமனை, மதுரை.***

## சந்தா செலுத்த...

**2 வருடச் சந்தா: ரூ.50/–, 4 வருடச் சந்தா: ரூ.100/–**

கண் ஒளி இதழுக்கு சந்தா செலுத்த விரும்புபவர்கள், சந்தாத் தொகையை மணியார்டரில் அனுப்பி வைக்கவும். உங்களது தெளிவான முகவரி, தொலைபேசி எண் மற்றும் அஞ்சல் இலக்க எண்ணையும் குறிப்பிட்டு, 'கண் ஒளி சந்தாவுக்கு' என எழுதவும்.

**முகவரி:**

காசாளர், கண் ஒளி, அரவிந்த் கண் மருத்துவமனை,
1, அண்ணா நகர், மதுரை – 625020.

தொலைபேசி: 0452–4356500

# நீரிழிவு [சர்க்கரை] நோய்



சர்க்கரை நோய் என்பது ஓர் ஆயுட்கால நோய். நம் உடலில் இன்சுலின் என்ற ஹார்மோன் சுரப்பது குறைந்து இரத்தத்தில் சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்த முடியாமல் போகும் நிலையையே சர்க்கரை நோய் என்கிறோம். சர்க்கரை நோய் உள்ளவர்களில் 80 சதவீதம் பேருக்கு கண் பாதிப்படைகிறது. கண் பாதிப்படைவது என்பது இரத்தத்தில் இருக்கும் சர்க்கரையின் அளவைப் பொறுத்தது மட்டும் அல்ல, எத்தனை வருடங்களாக நோய் இருக்கின்றது என்பதைப் பொறுத்தும் இருக்கின்றது. என்றாலும் இரத்தத்தில் சர்க்கரையைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தால் கண் பாதிப்படைவதை சிறிது கட்டுப்படுத்தலாம். சர்க்கரை நோய் கண்ணின் இரத்தக் குழாய்களையே முக்கியமாக பாதிக்கிறது. இப்பொழுது இந்தியாவில் நீரிழிவு நோயினால் கண் பார்வை குறைந்தவர்கள் இலட்சக்கணக்கில் இருக்கிறார்கள். நவம்பர் 14 உலக சர்க்கரை நோயாளிகள் தினம்.

## சர்க்கரை நோய் வருவதற்கான காரணங்கள்

பரம்பரை வழியாகவும், கணையத்தில் ஏற்படும் குறைபாடு காரணமாகவும் முறையற்ற உணவுப் பழக்கத்தினாலும் மற்றும் உடல் பருமன் காரணமாகவும் வர வாய்ப்பிருக்கிறது.

## நோயின் அறிகுறிகள்

அதிகமாக பசியெடுத்தல், அளவுக்கதிகமான தாகம், அடிக்கடி சிறுநீர் கழித்தல், எடை குறைதல், உடல் சோர்வு, மயக்கம், கண் பார்வை மங்குதல், உடலில் ஏதாவது புண் ஏற்பட்டு வெகுநாட்களாக ஆறாதிருத்தல் போன்றவை சர்க்கரை நோயின் அறிகுறிகளாகும்.

## மனித உடம்பில் சர்க்கரையின் விளைவு

சர்க்கரை நோயாளிகளுக்கு மற்றவர்களை விட கண்பார்வைக் குறைபாடு ஏற்படும் வாய்ப்பு இரு மடங்கு அதிகம் உள்ளது. சர்க்கரை நோய் உள்ளவர்களில் 50 சதவீதத்துக்கும் மேலானோர், கண் நோயால் பாதிக்கப்படுகின்றனர். சர்க்கரை நோயால் விழித்திரை பாதிப்பு, கண்புரை, இரத்தக்குழாய் அடைப்பு, கண்நீர் அழுத்த நோய் முதலிய பாதிப்புகள் ஏற்படுகின்றன.

சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மூளை, இருதயம், சிறுநீரகம் ஆகிய உறுப்புகளும் பாதிக்கப்படுகின்றன. இது போன்ற தீராத பிரச்சினைகளை உண்டாக்குவது சர்க்கரையின் தன்மைகளாகும்.

**விழித்திரையின் அமைப்பு:**
ஒரு கேமராவின் உள்ளே உள்ள ஃபிலிம் போன்றது விழித்திரை. சிறப்பான செல்கள் மூலம் இங்கே பெறப்படும் படக்காட்சிகள் பார்வை நரம்பு மூலம் மூளைக்கு அனுப்பப்படுகின்றன. விழித்திரையில் உள்ள விழிப்புள்ளிதான் பார்வைக்கு பொறுப்பேற்கிறது. விழிப்புள்ளியில் ஏதேனும் சேதம் ஏற்பட்டால் பார்வை இழப்பு ஏற்படும்.

**விழித்திரை பாதிப்பு:**
5 முதல் 10 வருடங்களாக சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டவர்கள், 50 வயதிற்கு மேற்பட்ட சர்க்கரை நோயாளிகள்.

இன்சுலின் சார்ந்த சர்க்கரை நோயாளிகள், சர்க்கரை நோயுடன் இரத்த அழுத்தம், குடிப்பழக்கம், மற்றும் புகைப் பிடிக்கும் பழக்கம் உள்ளவர்களுக்கு விழித்திரையில் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

**பரிசோதனை முறைகள்**

**சிலிட் லேம்ப்** (Slitlamp) **பரிசோதனை:**
கண் அமைப்பை விரிவாகப் பார்க்க இந்த சிலிட் லேம்ப் உதவுகிறது. இதன் மூலமாக கண்ணின் பல்வேறு நிலைமைகளைக் கண்டறியலாம். விழித்திரையைப் பரிசோதிக்க கையில் பிடித்துக் கொள்ளப்படும் ஒரு லென்சு (20D, 90D, 78D) உதவுகிறது. Indirect Ophthalmascope கண்ணின் நிலையைப் பார்க்க உதவுகிறது.

**எஃப் எஃப் ஏ:** இது மருத்துவ மதிப்பீட்டுக்கு உதவும் ஒரு பரிசோதனை நடைமுறை. இதில் நரம்பின் வழியாக சாயம் ஊசி மூலம் செலுத்தப்பட்டு ப்ளூ லைட் மூலம் விழித்திரை படம் எடுக்கப்படுகிறது.

**ஓ.சி.டி:** ஆப்டிகல் கோஹெரன்ஸ் டோமோகிராபி எனப்படும் ஓ.சி.டி பரிசோதனையின் மூலமாக விழித்திரையின் குறுக்கு வெட்டுத் தோற்றங்களைப் பெற முடியும்.

**சிகிச்சை முறைகள்**
முதலில் இரத்தத்தில் சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்த வேண்டும். விழித்திரையின் மாற்றங்கள் தீவிரமடைவதை தடுத்தல் மற்றும் தற்போதைய பார்வையைத் தக்க வைக்க லேசர் போட்டோகோகுலேஷன் உதவுகிறது.

விழித்திரையில் ஒழுங்கற்ற நிலையில் புதிய இரத்த நாளங்கள் உருவாகி இரத்தக்கசிவு ஏற்படுவதைத் தடுப்பதற்கும் லேசர் சிகிச்சை உதவுகிறது. விழிப்புள்ளியில் வீக்கத்தைக் குறைத்திட விழித்திரையில் ஊசி மருந்து செலுத்துதல், அதிக இரத்தகசிவு மற்றும் விழித்திரை விலகல் ஏற்படும்போது விட்ரெக்டமி அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது.

சர்க்கரை நோய் உள்ளவர்கள் தங்களுடைய குடும்ப உறுப்பினர்களையும் அழைத்து வந்து பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். 6 மாதத்திற்கு ஒரு முறை சர்க்கரை நோயாளிகள் கண் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் கண் விழித்திரையில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதா வேறு ஏதேனும் சிகிச்சை தேவைப்படுமா என்பதை தெரிந்து அதற்கேற்றவாறு மருத்துவம் செய்துகொள்ள முடியும். இல்லையென்றால் பார்வை இழக்க வாய்ப்பு உள்ளது. எனவே சர்க்கரை நோயாளிகள் தன்னுடைய கண்களை பாதுகாப்பது மிக மிக அவசியம்.

**J.** ***பரிமளா,***
***அரவிந்த் கம்யூனிகேஷன்ஸ்***

## கண்நீர் அழுத்த நோயை

குணப்படுத்த முடியாது



ஆனால், கட்டுப்படுத்தலாம்



உரிய நேரத்தில் இந்நோயைக் கண்டறிந்து அளிக்கப்படும் தகுந்த சிகிச்சையினால் மட்டுமே, கண்நீர் அழுத்தத்தை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியும்.

# கண்ணீர்ப் பாதை அடைப்பு



## கண்ணீர் – ஒரு விளக்கம்

கண்களிலுள்ள கண்ணீர் சுரப்பிகள் கண்ணீரைச் சுரக்கின்றன. இக்கண்ணீர் நுண்ணிய நரம்புகள் வழியாகக் கண்ணீருக்கும் கண் இமைகளுக்கும் இடையில் உள்ள இடைவெளியை சென்றடைகிறது. இதன் முக்கிய வேலை, கண்களைச் சுத்தமாகவும் உலர்ந்துவிடாமலும் ஈரப்பதத்துடனும் பளபளப்பாக வைப்பதேயாகும். கண்ணீரில் லைசோசெம் என்ற கிருமி நாசினி இருக்கிறது. இது, கண்களைத் தாக்கும் சிலவகைக் கிருமிகளிடமிருந்து கண்களைப் பாதுகாக்கிறது.

## கண்ணீர்ப் பாதை அடைப்பு

கண்ணீர்ப் பாதையில் அடைப்பு ஏற்பட்டால் கண்ணீர் வெளியேற முடியாமல் கண்களின் ஓரத்தில் தேங்கத் தொடங்கிவிடும். பிறந்த குழந்தைகளுக்கு இந்தச் சிக்கல் பொதுவாக ஏற்பட்டாலும் இளம் வயதினருக்கும் 70 வயதைக் கடந்தவர்களுக்கும் இந்தப் பாதிப்பு ஏற்படும்.

## அறிகுறிகள்

- கண்களில் இருந்து கண்ணீர் அதிகளவில் வெளியேறுதல் அல்லது நீர் வடிதல்
- கண்ணின் உள் ஓரத்தில் வீக்கம் ஏற்படுதல். இந்த இடத்தில்தான் கண்ணீர்ப் பாதை உள்ளது.
- வீக்கம்
- கண் சிவப்பாகுதல்
- கண்களில் பீளை வடிதல்

## சிகிச்சை

கண்ணீர்ப் பாதை அடைப்புக்கு முறையான சிகிச்சை அவசியம் என்பதை உணர வேண்டும். உங்களுக்கு வேறு ஏதேனும் கண் குறைபாடுகள் இருந்தால் கண்ணீர்ப் பாதை அடைப்பானது அதிக சிக்கல்களை உருவாக்கலாம். கண்ணீர்ப் பாதை அடைப்புக்கான சிகிச்சையின் மூலம் இந்தக் குறைபாட்டைக் குணப்படுத்தலாம்.

**ஒவ்வாமையைத் தடுக்கும் மருத்துவம்**

- குழந்தைகளுக்கான சிறப்பு மசாஜ் முறைகள்
- குழந்தைகளுக்கு கண்ணீர்ப் பாதை அடைப்பு ஏற்பட்டிருந்தால் மெல்லிய குச்சி மூலம் அடைப்பைத் திறந்து விட Probe எனப்படும் சிறிய அறுவை சிகிச்சை செய்தல்
- மூக்கின் வழியாக நீரை வெளியேற்றும் குழாய்கள் பொருத்துதல்

**குழந்தைகளுக்கான சிகிச்சை – அறுவை சிகிச்சையல்லாத (Medical) முறை:**

- கண்ணீர்ப்பை உள்ள இடத்தை அழுத்தி ஒரு நாளைக்கு நான்கு முதல் ஆறு வேலை தேய்த்து (Massage) பீளையை அகற்றிவிட வேண்டும். இதன் மூலம் இவ்வடைப்பு சரியாவதற்கு வாய்ப்பு உள்ளது. இச்சிகிச்சை முறை, குழந்தைக்கு ஒரு வயதாகும் வரை பயனளிக்கும்.
- கண்ணில் சிவப்பு, பீளை கட்டுதல் ஆகியவை இருந்தால் கண் சொட்டு மருந்து (Antibiotic) பயன்படுத்தலாம்.
- கண்ணீர்ப் பாதையில் சிலிக்கானால் ஆன குழாயைச் செலுத்தி ஒரு சில வாரங்கள் வைத்திருந்தால் அடைப்புச் சரியாகும்.

**குழந்தைகளுக்கான சிகிச்சை – அறுவை சிகிச்சை (Surgical) முறை**

- மேற்குறிப்பிட்டபடி மருந்து மற்றும் தேய்த்தல் முறையும் (Massage) பயனளிக்காவிட்டால் புரோபிங் (Probing) என்னும் அறுவை சிகிச்சை முறை மேற்கொள்ளப்படுகிறது. இம்முறையில் மயக்க மருந்து கொடுத்து Probe எனப்படும் ஒரு மெல்லிய கருவியை கண்ணீர்ப்பையையும் மூக்கையும் இணைக்கும் குழாய்க்குள் செலுத்தி அடைப்பை அகற்றி குணப்படுத்தலாம். 80 சதவீதம் குழந்தைகளுக்கு இந்த சிறிய அறுவை சிகிச்சை நன்கு பலனளிக்கிறது.
- கண்ணீர்ப்பாதை அடைப்பினால் அவதியுறும் குழந்தைகளுக்கு இரண்டு வயது வரை எவ்வித சிகிச்சையும் மேற்கொள்ளாவிட்டால் மேற்குறிப்பிட்ட சிகிச்சை முறைகள் பலனளிக்காது.

நான்கு முதல் ஐந்து வயதுக்கு மேல் உள்ள குழந்தைகளுக்கு மூக்கு எலும்பு நன்றாக வளர்ச்சியடையும்போது DCR என்ற அறுவை சிகிச்சை மூலமும் சரி செய்யப்படுகிறது.

**பெரியவர்களுக்கான சிகிச்சை முறை:**

பெரியவர்களுக்கும் 4 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கும் DACRYOCYSTORHINOSTOMY (DCR) அறுவை சிகிச்சை சிறந்தது.

இதில் கண்ணீர்பைக்கும் மூக்குக்கும் இடையில் உள்ள சிறு மூக்கு எலும்பை உடைத்து ஒரு புதிய பாதை உருவாக்கப்படும். இந்த அறுவை சிகிச்சைக்குப் பிறகு கண்ணில் நீர்வடிவதோ பீளை கட்டுதலோ இருக்காது.

மிகவும் வயதானவர்களுக்கும் மூக்கில் வேறு ஏதேனும் பிரச்சனை இருப்பவர்களுக்கும் நீர்ப்பையை முழுவதும் அகற்றும் DACRYOCYSTECTOMY (DCT) எனும் அறுவை சிகிச்சை செய்யப்படும். இந்த அறுவை சிகிச்சைக்குப் பிறகு கண்ணில் பீளை கட்டுதல் இருக்காது. ஆனால் நீர் வடிதல் இருக்கும்.

இந்த இரு அறுவைசிகிச்சைகளுமே கண்ணிற்கும் மூக்கிற்கும் இடையில் தோலின் மீது சிறிய துவாரம் மூலமாக செய்யப்படும். காலப்போக்கில் இந்தத் தழும்பு மறைந்து விடும்.

**லேசர் DCR (Laser):** இது, புதிய முறை. அடைக்கப்பட்ட கண்ணீர்ப் பாதைக்குள் மிக மெல்லிய குழாய் நுழைக்கப்படும். கண்ணீர்ப் பாதையையும் மூக்கையும் இணைக்கும் எலும்பு வரை இந்த மெல்லிய குழாய் செல்லும். இந்தக் குழாய் வழியாக மிக மெல்லிய ஒயர் செல்லும். எலும்பை ஒயர் அடைந்ததும், லேசர் சிகிச்சை தொடங்கப்படும். இந்த லேசர், எலும்பைத் துளைத்துக் கண்ணீர்ப் பாதைக்கான புதிய வழியை உருவாக்கும்.

- மிகச்சில நிமிடங்களே அறுவை சிகிச்சை நீடிக்கும்.
- அறுவை சிகிச்சைக்குப் பின் தையல் இருக்காது. எனவே தழும்போ வெளிப்புறத்தில் காயமோ இருக்காது.
- மூக்கின் அருகே சிறிய பைகள் பொருத்தப்பட மாட்டாது.
- இந்தப் புதிய முறையில் சிறப்பான முடிவுகள் எப்போதும் கிடைப்பதில்லை.
- மயக்க மருந்து கிரீம் தடவப்படும். விழித்த நிலையில் இருப்பீர்கள். ஆனால் வலியை உணர மாட்டீர்கள்.
- இரண்டாம் கட்ட அறுவை சிகிச்சை தேவைப்படலாம்.

*கோ. முருகராஜ்,*
*அரவிந்த் கம்யூனிகேஷன்ஸ்*

இதழின் மேலே இடம்பெற்றுள்ள உங்கள் முகவரி உள்ள ஸ்டிக்கரை பார்த்து உங்கள் சந்தா முடிவடையும் மாதத்தைத் தெரிந்து கொள்ளலாம். இந்த மாதத்துடன் சந்தா முடிவடையும் நிலையில் உள்ளவர்கள் சந்தாத் தொகையை அனுப்பி வைக்கவும். உங்கள் அன்புக்குரியவர்களுக்கு பிறந்தநாள், திருமணநாள் பரிசாக 'கண் ஒளி' இதழை அளிக்கவும். இதழுக்கான சந்தாவை எங்களிடம் செலுத்தவும். உங்கள் சார்பாக ஒவ்வொரு மாதமும் கண் ஒளி இதழை உங்கள் அன்புக்குரியவர்களுக்கு நாங்கள் அனுப்பி வைக்கிறோம்.

# கண்தானத்தில் முதலிடத்தில் இருக்கும் தமிழ்நாடு




கண்தானத்தின் தேவை குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தேசிய கண்தான இருவார விழா, நாடு முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் இறுதி வாரம் மற்றும் செப்டம்பர் முதல் வாரத்தில் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழாவை பயனுள்ள வகையில் கடைபிடிக்கும் விதமாக, அரவிந்த் கண் மருத்துவமனையின் சார்பில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் படியான நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

மதுரை அரவிந்த் கண் மருத்துவமனையானது, கல்வி நிறுவனங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மாவட்ட நீதி மன்றம், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளுடன் இணைந்து கண்தானம் குறித்த விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்த பல்வேறு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தது.

மருத்துவமனை மற்றும் ஆரோலேபில் இருந்து, சுமார் 30 பெண்கள் உட்பட 100 பணியாளர்கள் கலந்துகொண்ட இருசக்கர வாகனப் பேரணி நடைபெற்றது. இந்த பேரணி குறித்து கருத்து தெரிவித்த கருவிழிப் பிரிவின் தலைமை இயக்குனர் மற்றும் கல்வி இயக்குநரான டாக்டர். என்.வெங்கடேஷ் பிரஜனா, கண்தானம் குறித்த விழிப்புணர்வை பொது மக்களிடையே ஏற்படுத்த வேண்டும் என்றார். மேலும், தமிழக மக்களிடையே கண்தானம் குறித்த விழிப்புணர்வு அதிகமாக உள்ளது. இதனால்தான் இந்தியாவில் கண்தானத்தில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது என்றும் கூறினார். இந்த வேகத்தில் தடை ஏதும் ஏற்படாதவாறு தொடர வேண்டும் எனவும் கூறினார்.

அதேபோல், நோயாளிகள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்ட கையொப்ப பிரச்சாரம் மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்றது. அரவிந்த் கண் வங்கியின் இயக்குனர், திரு. M. சீனிவாசன் அவர்கள் கண்தானம் குறித்த விழிப்புணர்வு உரையை மதுரைப் பண்பலையில் வழங்கினார். இதில் பொது மக்களும் கலந்துகொண்டு கண்தானம் குறித்த தங்களது சந்தேகங்களை கேட்டுத் தெரிந்து கொண்டனர். பல்வேறு சமூக வலைதளங்களிலும் கண்தானத்தின் தேவையை மக்கள் உணரும் படியான தகவல்கள் பகிரப்பட்டன.

T. கல்லுப்பட்டியில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில், கண்தான விழிப்புணர்வு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களைச் சேர்ந்த மொத்தம் 60 பணியாளர்கள் கலந்து கொண்டதோடு, கண்தானம் செய்வதற்கான உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இதேபோன்று, மாணவர்கள் கண்தானத்தின் தேவையை அறிந்துகொள்ளும் விதமாக பாத்திமா கல்லூரியில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மொத்தம் 400 மாணவிகளும், 20 பேராசிரியர்களும் கலந்துகொண்டனர்.

இறுதியாக, சின்னமனூர் ரோட்டரி சங்கத்துடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில், ரோட்டரி சங்கங்களைச் சேர்ந்த 35 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். மதுரை கண்வங்கியின் மேலாளர், திரு.சரவணன் கண்தானம் பெறுவதில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் முக்கியத்துவம் குறித்து உரையாற்றினார்.

திருநெல்வேலி அரவிந்த் கண் மருத்துவமனையின் சார்பில், மருத்துவமனை வளாகத்தில் விழிப்புணர்வு கண்காட்சி வைக்கப்பட்டிருந்தது. ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, கல்லூரி, அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. ''கண்தானத்தை அதிகரிக்கத் தேவையானது எது? – மக்களின் மனோபாவத்தில் மாற்றம் ஏற்படுவதா அல்லது கடுமையான அரசு விதிகளா?'' என்ற தலைப்பில் ஸ்ரீ ஜெயந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் மெட்ரிக் பள்ளியில் விவாதம் நடைபெற்றது. இதில் பள்ளிக் குழந்தைகள் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

பாண்டிச்சேரி அரவிந்த் கண் மருத்துவமனையின் சார்பாக, பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. மருத்துவமனை வளாகத்தில் இரண்டு வாரங்களுக்கும் பாண்டிச்சேரி கடற்கரையில் 10 நாட்களுக்கும் விழிப்புணர்வு கண்காட்சி வைக்கப்பட்டிருந்தது. கண்தானம் குறித்த வரைபடப் போட்டி மூன்று பள்ளிகளில் நடைபெற்றது. இதில் மொத்தம் 150 மாணவிகள் கலந்து கொண்டனர். மூன்று பள்ளிகளிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. மருத்துவர்களுக்கு வினாடி வினா போட்டி நடைபெற்றது. மொத்தம் 50 மருத்துவர்கள் இதில் கலந்து கொண்டனர். பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் மாணவர்களிடையே கண் மருத்துவர் கண்தானம் செய்வதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு உரையாற்றினார்.

உயர்திரு கவர்னர். டாக்டர். கிரண்பேடி, சைக்கிள் பேரணியைத் துவக்கி வைத்து கலந்து கொண்டார். இதில் பாண்டிச்சேரி அரவிந்த் கண் மருத்துவமனையின் தலைமை மருத்துவர், டாக்டர். வெங்கடேஷ், கண் வங்கி மருத்துவர் டாக்டர். சிவானந்தா உட்பட 50 பணியாளர்கள் கலந்து கொண்டனர். கார்னியா மீட்டெடுக்கும் திட்டத்தில் பணிபுரிந்தவர்களையும், லயன்ஸ் மற்றும் ரோட்டரி சங்கத்தில் இருக்கும் ஊக்குவிப்பாளர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு பாண்டிச்சேரி அரவிந்த் கண் மருத்துவமனையில் நடைபெற்றது. தன்னார்வத் தொண்டு நிறுவங்களைச் சேர்ந்த 250 உறுப்பினர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

கோயம்புத்தூர் அரவிந்த் கண் மருத்துவமனையின் சார்பாக, கல்லூரி மாணவர்களுக்கான குறும்படப்போட்டி நடைபெற்றது. இதில் ஐந்து விழிப்புணர்வு குறும்படங்கள் தேர்வு செய்யப்பட்டு திரையிடப்பட்டது. CSOS மற்றும் அரவிந்த் கண் மருந்த்துவமனை இணைந்து கண்தான விழிப்புணர்வுப் பேரணி நடத்தியது. பள்ளிக்குழந்தைகளுக்கு இரு பிரிவுகளாக வரைபடப் போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும் மருத்துவமனை வளாகத்தில் விழிப்புணர்வுக் கண்காட்சியும், நோயாளிகள் மற்றும் பணியாளர்கள் கண்தான உறுதிமொழி ஏற்கும் நிகழ்வும் நடைபெற்றது.

*திவ்யா ரமேஷ், அரவிந்த் கம்யூனிகேஷன்ஸ்*



# பள்ளி கண் மருத்துவ முகாம் மூலம் கிடைத்த பார்வை

மருத்துவத் துறையில் ஏற்பட்ட முன்னேற்றத்தால், இன்று பல நோய்களுக்கு தடுப்பு மருந்துகளும், சிகிச்சைமுறைகளும் கண்டறியப்பட்டு விட்டன, இன்றும் ஆராய்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் இந்த முன்னேற்றங்கள் பற்றிய விழிப்புணர்வு அநேக மக்களை சென்றடையாததால், சிகிச்சை அளித்து குணப்படுத்தக்கூடிய நோய்களும் கூட சிகிக்சையளிக்கப்படாமலேயே விடப்படுகின்றன.

கோயம்புத்தூருக்கு அருகில் இருக்கும் ஒரு கிராமத்தில் வசிக்கும் கவிதாவிற்கு பிறந்ததில் இருந்தே வலது கண் பாதி மூடிய நிலையில் இருந்தது. அவள் வளரும் போது சரியாகி விடும் என்று அவளது பெற்றோர் நினைத்துள்ளனர். ஆனால் கண்ணின் நிலை மாறவில்லை. கவிதா பள்ளிக்கு செல்லும் பருவத்திற்கும் வந்துவிட்டாள். கண்ணின் நிலை சரியாகாததால் படிப்பிலும், தனது அன்றாட வேலைகளிலும் கூட கவனம் செலுத்த முடியவில்லை. அப்போதுதான் அரவிந்த் கண் மருத்துவமனை சார்பாக கவிதா படிக்கும் பள்ளியில் முகாம் நடத்தப்பட்டது.

முகாமில் கவிதாவின் கண்களைப் பரிசோதித்த மருத்துவர் கவிதாவின் வலது கண்ணை சரிசெய்ய முடியும் என்றும், கண் மேல் இமையின் தசைகள் சரியாக வளர்ச்சியடையாமல் இருப்பதால் தான் இது போன்று கண் தானாக மூடிக் கொள்கிறது என்ற விபரத்தைக் கூறி, கவிதாவை அவளது பெற்றோருடன் அரவிந்த் கண் மருத்துவமனைக்கு வருமாறு மருத்துவர் கூறினார்.

விரைவில் இக்குறைபாட்டை சரி செய்யாமல் விட்டால் கண்களை அசைக்க முடியாத நிலையும், பார்வைக் குறைபாடும் ஏற்பட வாய்ப்பிருப்பதாகவும் தெரிவித்தார். அரவிந்த் கண் மருத்துவமனைக்கு வந்த கவிதா மற்றும் அவளது பெற்றோரிடமும் இக்குறைபாட்டின் தன்மையை மருத்துவர் விளக்கி இதற்கு



*அறுவை சிகிச்சைக்கு முன்*



*அறுவை சிகிச்சைக்கு பின்*

அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று கூறினார்.

முதல் கட்ட பரிசோதனைகள் அனைத்தும் முடிவு பெற்ற பின் வெற்றிகரமாக அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

**– தேவி, விழி ஒளி ஆய்வாளர், அரவிந்த் கோயம்புத்தூர்**

# லேசிக்

## லேசிக் சிகிச்சை

கிட்டப் பார்வை, தூரப்பார்வை போன்ற பார்வைக் குறைபாடு உள்ளவர்கள் பொதுவாக கண்ணாடிகளை அணிவர். மருத்துவத் துறையில் ஏற்பட்ட முன்னேற்றங்களினால் கான்டாக்ட் லென்ஸ் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் லேசர் எனும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

## லேசிக் சிகிச்சை – ஓர் அறிமுகம்:

லேசிக் எனபப்டும் நவீன இயந்திரத்தின் மூலம் எக்ஸைமர் லேசர் என்ற மெல்லிய ஒளிக்கதிரைச் செலுத்தி இந்தச் சிகிச்சை செய்யப்படுகிறது. அதிநவீனத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி செய்யப்படும் இந்தச் சிகிச்சையில் கருவிழியின் அமைப்பு மாற்றப்பட்டு, கிட்டப்பார்வை, தூரப்பார்வை மற்றும் சமச்சீரற்ற பார்வைக் குறைபாடுகள் சரிசெய்யப்படுகிறது.

## யார் லேசிக் செய்துக்கொள்ளலாம்?

- 20 வயதிற்கு மேற்பட்டவர்கள்.
- கடுமையான கண் நோயால் பாதிக்கப்படாதவர்கள்
- ஆரோக்கியமான கருவிழி உடையவர்கள்

## நினைவில் கொள்ள வேண்டியவை:

லேசர் சிகிச்சைக்குப் பிறகு தவறாமல் கடைபிடிக்க வேண்டிய விஷயங்கள் பின்வருமாறு:

- ஒருவாரக் காலத்திற்கு தலைகுளிக்கக் கூடாது.
- குறைந்தது மூன்று நாட்களுக்கு படித்தல், கணிப்பொறியில் வேலை செய்தல் கூடாது.
- ஒரு வாரம் வரை தூசி நிறைந்த வெளி இடங்களுக்கு செல்லக்கூடாது.
- ஒருமாத காலத்திற்கு கண்களைத் தேய்க்கவோ கசக்கவோ கூடாது.
- கண்களில் அடிபடாமல் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.
- ஒரு வாரக் காலத்திற்கு கண் மை போன்ற பொருட்களைப் பயன்படுத்தக்கூடாது.

*கோ. முருகராஜ்,*
*அரவிந்த் கம்யூனிகேஷன்ஸ்*

# கண்புரை அகற்றப் பயன்படும் ஃபேக்கோ முறை



கண்புரை நீக்க அறுவை சிகிச்சையானது, கடந்த பல நூற்றாண்டுகளாகக் கடந்து வந்த பாதை மிகவும் சுவாரசியமானது. வெகு காலத்திற்கு முன்பு கண்புரையை நீக்க அதனை உட்புறமாக ஊசியால் தள்ளி விடுவார்கள். (Couching). இன்று தொழில்நுட்பம் அதிவேகமாக வளர்ந்துள்ள நிலையில் PHACO (ஃபேக்கோ) போன்ற புதிய முறைகள் கண்டறியப்பட்டு, இழந்தப் பார்வையை மீட்கப்படுகிறது. ஃபேக்கோ அறுவை சிகிச்சை முறை பற்றி இந்த மாதம் தெரிந்து கொள்வோம்.

**ஃபேக்கோ முறை:**

இது தையல் இல்லாத நவீன சிகிச்சை முறை (Phaco). இந்த முறையில் கண்ணில் 2.8, 2.2 மி.மீ அளவிற்கு சிறிய கீறல் போடப்படுகிறது. அல்ட்ரா சோனிக் அலைகள் உதவியுடன் புரை படிந்த லென்ஸ் சிறு துகள்களாக உடைக்கப்பட்டு, ஊசியின் உதவியுடன் வெளியே எடுக்கப்படுகிறது. பிறகு, இதற்காகவே சிறப்பாகச் செய்யப்பட்ட செயற்கை லென்ஸ் கண்ணில் பொருத்தப்படுகிறது. சிறிய துவாரத்தின் வழியே அறுவை சிகிச்சை செய்யப்படுவதால் தையல் போட வேண்டிய அவசியம் இல்லை. காயம் விரைவில் ஆறிவிடும்.

**ஃபேக்கோ செய்துகொள்வதால் ஏற்படும் நன்மைகள்:**

- இம்முறையில் புரை முற்றும் வரை காத்திருக்காமல் ஆரம்பத்திலேயே அறுவை சிகிச்சை செய்யலாம்.
- சிறிய துவாரத்தின் வழியே அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது.
- தையல் போடத் தேவையில்லை; கண்ணில் எரிச்சல் ஏற்படாது; நீர் வடியாது; தையல் பிரிக்கும் அவசியமும் கிடையாது.
- அதிக நாட்கள் சொட்டு மருந்து பயன்படுத்தத் தேவையில்லை.
- அறுவை சிகிச்சை முடிந்த அதே நாள் அல்லது ஒருநாள் கழித்து வீடு திரும்பலாம்.
- அடிக்கடி பரிசோதனைக்கு வரவேண்டிய அவசியம் இல்லை.
- ஒரு மாதத்திற்கு பிறகு நிலையான பார்வையைப் பெறலாம்.
- அறுவை சிகிச்சை முடிந்து ஒரு வாரம் கழித்து டி.வி. பார்க்கலாம்; புத்தகம் படிக்கலாம்.

# கண் பரிசோதனை மையங்கள்: தேனி மாவட்டம்

தேனி மாவட்டத்தில் உள்ள அனைவருக்கும் கண் சிகிச்சையை அளிக்கும் நோக்கத்துடன் தேனி நகரில் அரவிந்த் கண் மருத்துவமனை 1985 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மாவட்டத்தில் உள்ள பல பகுதி மக்களுக்கும் சிறப்பான கண் மருத்துவச் சேவை அளிக்கும் நோக்கத்துடன் தற்போது ஏழு ஊர்களில் அரவிந்த் கண் பரிசோதனை மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

| 2017 டிசம்பர் மாதம் வரை தேனி மாவட்டத்தில் உள்ள அரவிந்த் கண் பரிசோதனை மையங்களில் சிகிச்சை எடுத்துக்கொண்டவர்களின் எண்ணிக்கை | |
|---|---|
| மொத்த வெளிநோயாளிகள் | 5,19,937 |
| கண்ணாடி வாங்கியவர்கள் | 75,403 |
| கண்புரை அறுவை சிகிச்சை செய்து பயன் பெற்றவர்கள் | 16,570 |
| சிறப்பு பிரிவுகளில் சிகிச்சை செய்து பயன் பெற்றவர்கள் | 21, 561 |

**ஆண்டிப்பட்டி**
ஸ்டேட் பேங்க் அருகில்,
மதுரை – தேனி மெயின் ரோடு,
ஆண்டிப்பட்டி– 625512; தேனி மாவட்டம்.
தொலைபேசி: 04546 – 242113.

**போடிநாயக்கனூர்**
1/1 A , குலாம் மைதீன் சந்து
போடி– 625513, தேனி மாவட்டம்,
தொலைபேசி:04546 – 282658.

**சின்னமனூர்**
மறவர் மக்கள் மன்றம் காம்ப்ளெக்ஸ்,
முதல் மாடி, கம்பம் மெயின் ரோடு,
சின்னமனூர் – 625515.
தேனி மாவட்டம்.
தொலைபேசி:04554 – 246005.

**பெரியகுளம்**
பழைய சலீம் மருத்தவமனை,
தேனி மெயின் ரோடு,
பெரியகுளம் – 625601, தேனி மாவட்டம்.
தொலைபேசி:04546 – 233453.

**தேவாரம்**
பாப்பா காலனி,
போஸ்ட் ஆபீஸ் அருகில் &
டி.என்.எஸ்.டி.சி. டிப்போ,
பாளையம் மெயின் ரோடு,
தேவாரம் – 625530; தேனி மாவட்டம்.
தொலைபேசி:04554 254999.

**வத்தலக்குண்டு**
மீன்காரார் முதல் தெரு,
பேருந்து நிலையம் பின்புறம்,
வத்தலக்குண்டு – 624202,
திண்டுக்கல் மாவட்டம்.
தொலைபேசி:04543 – 262302.

**கண்டமனூர்**
வார்டு 1–ஏ,ரங்கநாதர் கோவில் தெரு,
தேனி மெயின் ரோடு,
கண்டமனூர் – 625517, தேனி மாவட்டம்.
தொலைபேசி:04546 – 238077.

# அரவிந்த் கண் மருத்துவமனை நடத்தும் இலவச கண் பரிசோதனை முகாம்கள் பற்றிய விவரங்கள்

| தேதி | முகாம் நடைபெறும் ஊர் | முகாம் நடைபெறும் இடம் | முகாம் நடத்த உதவுபவர் | மொபைல் |
|---|---|---|---|---|
| 14.10.18 | வடுகப்பட்டி | வேளாளர் உறவின்முறை சமுதாயக்கூடம் | ரோட்டரி சங்கம் பெரியகுளம் | |
| 14.10.18 | K.K.பட்டி | ஒக்கலியர் மண்டபம் | மகாத்மா நுகர்வோர் அமைப்பு | |
| 19.10.18 | பொள்ளாச்சி | லயன்ஸ் ஹால் | லயன்ஸ் சங்கம் | 9994611911 |
| 20.10.18 | கடவூர் | இன்பசேவா சங்கம் | இன்பசேவா சங்கம் டிரெயினிங்செல் | 9042261153 |
| 20.10.18 | போடி, திருமலாபுரம் | சேனைத்தலைவர் திருமண மண்டபம் போடி | லயன்ஸ் சங்கம் | |
| 20.10.18 | கொண்டம் காரியேந்தல் | செயின்ட் அந்தோனி சர்ச் | லயோலா அகாடமி | |
| 20.10.18 | அறந்தாங்கி | ஓம் சக்தி மன்றம் கோவில் | ரோட்டரி சங்கம் | 9865928235 |
| 21.10.18 | திருப்பூர் | லயன்ஸ் ஹால் | லயன்ஸ் சங்கம் | 9442190045 |
| 21.10.18 | தென்காசி | சுப்புராஜ் மஹால் | BSSSSO | 9842132442 |
| 21.10.18 | கொள்ளேகால் | அரசு தாலுகா தலைமை மருத்துவனை | V&M பவுண்டேஷன் பெங்களூர் | 9343968272 |
| 21.10.18 | பட்டம்பி | வியாபாரி பவன் டிரஸ்ட் | சேம்பர் ஆப் காமர்ஸ் | 9846781688 |
| 21.10.18 | ஆத்திகுளம் | இராமகிருஷ்ணா மடம் | இராமகிருஷ்ணா மடம் | 9487493525 |
| 21.10.18 | செய்யார் | அரசு பெண்கள் மே.நி.பள்ளி | கௌதம் பைனான்ஸ் | |
| 21.10.18 | தாரமங்கலம் | செங்குந்தர் திருமண மண்டபம் | வாழ்க வளமுடன் டிரஸ்ட் | 9944233399 |
| 21.10.18 | விராலிமலை | அரசு ஆண்கள் மே.நி.பள்ளி | அன்னை தெரசா டிரஸ்ட் | 9626005653 |
| 21.10.18 | பேரையூர் | முருகன் தியேட்டர் திருமண மண்டபம் | லயன்ஸ் சங்கம் | 9442033429 |
| 21.10.18 | சூலக்கரை | V.T. மில் | V.T. மில்ஸ் | 9942915244 |
| 21.10.18 | பாம்பனார் | சமுதாயக்கூடம் | நவஜோதி டிரஸ்ட் | |
| 21.10.18 | அய்யம் பாளையம் | மெயின் தொடக்கப்பள்ளி | லயன்ஸ் சங்கம் | |

| | | | | |
|---|---|---|---|---|
| 21.10.18 | துவரங்குறிச்சி | அரசு பிரைமரி பள்ளி | லயன்ஸ் சங்கம் | 9443210975 |
| 21.10.18 | சின்னகளையம் புத்தூர் | அரசு நடுநிலைப்பள்ளி | முன்னாள் மாணவர்கள் சங்கம் | 8973420129 |
| 21.10.18 | S.புதூர் | அரசு உயர்பள்ளி | லயன்ஸ் சங்கம் | 9443193122 |
| 21.10.18 | திருக் கோயிலூர் | அரசு ஆண்கள் மே.நி.பள்ளி | வெளிச்சம் சோசியல் வெல்பேர் டிரஸ்ட் | |
| 21.10.18 | சிதம்பரம் | இராமகிருஷ்ணா பள்ளி | லயன்ஸ் சங்கம் | |
| 21.10.18 | திருக்கடையூர் | அரசு மே.நி.பள்ளி | லயன்ஸ் சங்கம் | |
| 21.10.18 | ஸ்ரீவில்லி புத்தூர் | லயன்ஸ் மெட்ரிக் பள்ளி | லயன்ஸ் சங்கம் | 9842165646 |
| 24.10.18 | தேவராயன் பாளையம் | AKVN மருத்துவமனை | சென்னை சில்க்ஸ் | 8508328773 |
| 24.10.18 | பன்னூர் | அரசு மேல் தொடக்கப்பள்ளி | லயன்ஸ் சங்கம் | |
| 26.10.18 | கண்டசி | கம்யூனிட்டி ஹெல்த் சென்டர் | DBCS & லயன்ஸ் சங்கம் | |
| 27.10.18 | ஹன்சூர் | SLV கம்யூனிட்டி ஹால் | திரு.சின்னசாமி மற்றும் முருகேசன் குடும்பம் | 9448352929 |
| 27.10.18 | T. கல்லுப்பட்டி | அய்யனார் கல்யாண மஹால் | நகர்நல கமிட்டி | 9842175940 |
| 27.10.18 | வளநாடு | இராமரத்தின கல்யாணமஹால் | Dr.VNL டிரஸ்ட் | 9965560142 |
| 27.10.18 | திருவாதவூர் | லெட்சுமி மெட்ரிக் பள்ளி | வட்டார களஞ்சியம் மேலூர் | 7010504029 |
| 27.10.18 | கேதார் | ரெட் விங் பள்ளி | லயன்ஸ் சங்கம் | |
| 28.10.18 | ஊட்டி | CSI ஹோபார்ட் பள்ளி | ரோட்டரி சங்கம் | 9442109100 |
| 28.10.18 | கும்பகோணம் | சரஸ்வதி பாடசாலை | கும்பகோணம் ஹோஸ்ட் | 9443116356 |
| 28.10.18 | பண்ருட்டி | லயன்ஸ் பில்டிங் | லயன்ஸ் சங்கம் | |
| 28.10.18 | பைசன்வாலி | பிரைமரி பள்ளி | நேதாஜி பவுண்டேஷன் | |
| 28.10.18 | மணலூர் பேட்டை | பஞ்சாயத்து யூனியன் நடு.நி.பள்ளி | லயன்ஸ் சங்கம் | |
| 3.11.18 | தருமபுரி | ரோட்டரி ஹால் | ரோட்டரி சங்கம் | 9842761659 |
| 3.11.18 | சிந்தாமணி | R.C. பிரைமரி பள்ளி | ராஜகோபால் நாயக்கர் டிரஸ்ட் | 9865493488 |
| 4.11.18 | சாம்ராஜ் நகர் | அரசினர் மருத்துவமனை | DBCS சாம்ராஜ் நகர் | 9945228015 |
| 4.11.18 | வடசேரி | SMRV மே.நி.பள்ளி | BSSSSO | 9578678075 |

| | | | | |
|---|---|---|---|---|
| **4.11.18** | கொப்பம் | லயன்ஸ் பள்ளி பாலக்காடு | லயன்ஸ் சங்கம் | 9349458196 |
| **4.11.18** | திருப்பரங் குன்றம் | மாதா அமிர்தானந்தமயி மடம் | மாதா அமிர்தானந்த மயி மடம் | 9443337080 |
| **4.11.18** | மேட்டுப் பாளையம் | ஜெயின் சங்கம் பில்டிங் | ஜெயின் சங்கம் | 9865789137 |
| **4.11.18** | கோபிசெட்டிப் பாளையம் | சின்ன வைரவிழா எலிமெண்டரி பள்ளி | லயன்ஸ் சங்கம் | 9791966759 |
| **7.11.18** | கன்னியாகுமரி | விவேகானந்த கேந்திரா ஹால் | விவேகானந்த கேந்திரா | 9486030438 |
| **8.11.18** | தேவராயன் பாளையம் | AKVN மருத்துவமனை | சென்னை சில்க்ஸ் | 8508328773 |
| **10.11.18** | சத்தியமங்கலம் | ரோட்டரி ஹால் | ரோட்டரி சங்கம் சத்தி | 9943011211 |
| **10.11.18** | தருமபுரி | சந்திரபாலசுப்பிரமணியம் மெ.பள்ளி | ஹேமலதா டிரஸ்ட் | 9942253585 |
| **10.11.18** | நஞ்சன்கூடு | டவுன் டென்னிஸ் கிளப் | டவுன் டென்னிஸ் கிளப் | 9019126767 |
| **10.11.18** | உடுமலைப் பேட்டை | லயன்ஸ் ஹால் | லயன்ஸ் சங்கம் | 9894623625 |
| **11.11.18** | R.R. நகர் | ஸ்ரீராம் பிரைமரி பள்ளி | ராம்கோ சிமெண்ட் | 9994497864 |
| **11.11.18** | ஈரோடு | செங்குந்தர் ஆண்கள் மே.நி.பள்ளி | லயன்ஸ் சங்கம் | 9443405016 |
| **11.11.18** | கரட்டுப்பட்டி | கம்யூனிட்டி ஹால் | VRG இராமசாமி செட்டியார் குடும்பம் | 9443340252 |
| **11.11.18** | திருவளர் சோலை | ஸ்ரீரங்கம் சீரடி சாய் பவுண்டேஷன் | சீரடி சாய் பவுண்டேஷன் | 9500422696 |
| **11.11.18** | E.புதுப்பட்டி | ரிலீஃப் ப்ராஜெக்ட் தொடக்கப்பள்ளி | ரிலீஃப் ப்ராஜெக்ட் | 9790268894 |
| **11.11.18** | ஆயக்காரன் புலம் | இரா.நடேசனார் அரசு மே.நி.பள்ளி | லயன்ஸ் சங்கம் | |



*ஒவ்வொரு மாதமும் 10, 11 தேதிகளில் கண் ஒளி இதழ்களை 15000க்கும் மேற்பட்ட சந்தாதாரர்களின் முகவரிகளுக்கு முறையாகச் சரிபார்த்த பின்னரே தபாலில் அனுப்பி வைக்கிறோம். இருப்பினும் வெகு சில சந்தாதாரர்கள் தங்களுக்கு 'கண் ஒளி' இதழ்கள் சரிவர கிடைப்பதில்லை என்றும், ஒரு மாதம் வரும் இதழ் மறு மாதம் வருவதில்லை என்றும் புகாரளிக்கின்றனர். இதழ் கிடைக்கவில்லை எனில் உங்கள் ஊரில் உள்ள தபால் நிலையத்தில் புகாரளிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். மேலும் உங்கள் பகுதி அஞ்சல்துறை பணியாளரிடம் இதழைத் தவறாமல் விநியோகிக்கும்படி கோரவும்.*

***– கண் ஒளி' ஆசிரியர் குழு.***

# கண் தானம் செய்த வள்ளல்கள்

## அரவிந்த் – கோயம்புத்தூர்

## ஜூன்-2017

நாகலெட்சுமி (85)- உடுமலைப்பேட்டை.
காஞ்சிமலையப்பன் (77) - உடுமலைப்பேட்டை.
இராமச்சந்திரன்.R.(90) - உடுமலைப்பேட்டை.
குமாரசாமி.S.(85) - கரூர்.
ராஜமாணிக்கம் (50) - கணியூர்.
பர்வதம்.G.(81) - குமரம்பாளையம்.
பத்மாவதி (69) - கருவம்பாளையம்.
ருக்குமணி.D.(70) - கள்ளப்பட்டி.
குருசாமி.N.(65) - பழனி.
வசந்தமணி (52) - பல்லடம்.
குமார்.K.(48) - பல்லடம்.
பாப்புத்தாய் (90) - இராக்கையாபாளையம்.
பாலுச்சாமி.R. (80) - தண்ணீர்பந்தல்.
வாஞ்சம்மாள் (90) - தாராபுரம்.
பழனிச்சாமி கவுண்டர் (74) - தாராபுரம்.
நாராயணசாமி.A.(87) - மங்கலம்.
சின்னமுத்து (65) - மாயக்கண்பட்டி.
கருப்பசாமி (94) - அவினாசி.
முத்துசாமி.R.(78) - அரசூர்.
துரைச்சாமி.R.(85) - கோயம்புத்தூர்.
சரஸ்வதி.P.(70) - கோயம்புத்தூர்.
அண்ணாசாமி.S.(60) - கோயம்புத்தூர்.
காயத்ரி (87) - கோயம்புத்தூர்.
சுப்புலெட்சுமி.P.(72) - கோயம்புத்தூர்.
புருஷோத்தமன்.D.(72) - கோயம்புத்தூர்.
நஞ்சம்மாள்.C.(70) - சூலூர்.
வெங்கட்ராமன்.S.(80) - சத்யமங்கலம்.
பாக்யம்மாள் (94) - ஒத்தக்கால் மண்டபம்.
விஜயலெட்சுமி (97) - ஒண்டிபுதூர்.

**2018 ம் ஆண்டில் செப்டம்பர் மாதம் (26.9.18 வரை) நமது மதுரை ரோட்டரி அரவிந்த் அகில உலக கண் வங்கி மூலம் கண்களைத் தானமாகப் பெற்று கண்ஒளி பெற்றவர்களின் எண்ணிக்கை: 862**

கண்தானம் செய்வதற்கு எந்த வயது வரம்பும் இல்லை. அதைப் பற்றிய விழிப்புணர்வை அளிக்கவே கண்தானம் செய்தவர்களின் வயதையும் குறிப்பிட்டுள்ளோம்.

கண்தானம் பற்றிய தகவல்களைத் தெரிந்துகொள்வதற்கு, தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்

**அரவிந்த் கண் வங்கிகள்:**

| | |
|---|---|
| மதுரை | – 0452–435 6100 |
| திருநெல்வேலி | – 0462–4356100 |
| கோயம்புத்தூர் | – 0422–4360400 |
| பாண்டிச்சேரி | – 0413–2619100 |

**அரவிந்த் கண் சேகரிப்பு மையங்கள்:**

| | |
|---|---|
| திண்டுக்கல் | – 0451–2448100 |
| தேனி | – 04546–252658 |
| சேலம் | – 0427–2356100 |

**அரவிந்த் கண்தான மையம்**

| | |
|---|---|
| கும்பகோணம் | – 98428 20007 |

**கூடுதல் விவரங்களுக்கு:**
www.aravind.org/default/servicescontent/Eyebanks

# ARAVIND OPTICALS
## அரவிந்த் ஆப்டிகல்ஸ்

- புரொக்ரஸிவ் லென்ஸ்கள்
- பிளாஸ்டிக் லென்ஸ்கள்-லேசான, உடையாத லென்ஸ்கள்
- பிரதிபலிப்பு இல்லாத கண்ணாடிகள்
- கீறல் விழாத கண்ணாடிகள் மற்றும் ஏராளமான அழகிய ஃபிரேம்கள்

## தரமான கண் கண்ணாடிகள் வாங்க எங்களை அணுகுங்கள்










அரவிந்த் ஆப்டிகல்ஸ்
அரவிந்த் கண் மருத்துவமனைகள்

மதுரை | திருநெல்வேலி | கோயம்புத்தூர் | பாண்டிச்சேரி | சேலம் | சென்னை | திருப்பதி
தேனி | திருப்பூர் | திண்டுக்கல் | தூத்துக்குடி | உடுமலைப்பேட்டை

**Registered Number : TN/MA/ 14/2018-2020, RNI No : TNTAM /2000/912**
**Date of publishing : 5th June 2018, Date of posting : 10, 11th June 2018 Posted at BPC, Madurai**
*Owned and published by Dr. G. Natchiar from Aravind Eye Hospital, 1, Anna Nagar, Madurai - 625 020 and Printed by N. Seshadri at Graphico, No, 172, Vakil New Street, Simmakkal, Madurai - 625 001.*
*Editor: Dr. G. Natchiar / Annual Subscription Rs.25/-*

# குழந்தைகளின் கண் பார்வையின் வளர்ச்சி

ஆரம்பத்திலிருந்தே குழந்தைகளின் பார்வையின் பரிணாம வளர்ச்சியை கவனித்து வந்தால் தேவையற்ற பார்வையிழப்பை தவிர்க்கலாம்




உங்கள் குழந்தையின் கண் பார்வை வளர்ச்சியில் தாமதம் ஏற்பட்டால் காலம் தாழ்த்தாமல் குழந்தைகளுக்கான கண் மருத்துவரை அணுகவும்.